# மார்க்ஸ் காலத்திய தமிழகத்துப் பொருள்முதல் வாதம்

**முப்பால்மணி**

## முன்சொல்

*பொருள்முதல் வாதம் என்பது, 'இயக்கவியல் பொருள்முதல் வாதம்', 'வரலாற்றியல் பொருள்முதல் வாதம்' என ஐரோப்பாவில் கார்ல்மார்க்ஸ் அவர்களால் ஆய்வு முறையியல்களாக மேற்கொள்ளப் பட்டு விளக்கம் பெற்றது. மார்க்சியம் எனவும் புகழுடன் உலகம் முழுவதும் பரவியது. அது தமிழகத்தில் 1920களில் பரவியது. மார்க்சியக் கோட்பாடு வேர் பதிய ஏதுவாகத் தமிழகத்தில் மெய்யியல் வழிப்பட்ட பொருள்முதல் வாதம் (உலகாயதம்) அப்போது பண்படத் தொடங்கியிருந்தது. இது கார்ல்மார்க்ஸ் வாழ்ந்த காலத்திலேயே தொடங்கியது. அதைப்பற்றிய விவரங்களை இந்தக் கட்டுரை முறைப்படுத்தித் தர விழைகின்றது.*

'இந்தத் தேகத்தை நான்' எனப் பேசிய ஒரு அணியினர்; அவர்கள் நாத்திகர். 'கடவுள், சிவம், பிரம்மத்தை நான்' எனப் பேசியவர்கள் இன்னொரு அணியினர்; அவர்கள் வேதாந்திகள்

*இந்தக் கட்டுரையை, 1906 ஆம் ஆண்டில் சி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய வரிகளில் இருந்து தொடங்குவது உசிதமாகும். அப்போது, 'யான்' என்ற கவிதையில் அவர், 'நான் என்றால் எது?' என்று கேள்வி எழுப்பிக்கொண்டு அதற்கு,*

> இந்த ஊன் (உடல்) எனக் கொள்வர் உயிரிலார் சிலரே
> பிரம்மமே யான் எனப் பேசுவர் பேசுக
> பிரம்மமே யான் எனப் பேசினர் பெரியோர்
> *(சுதேசமித்திரன் 17-09-1906)*

*என்ற விடையுடன் அந்தக் கவிதையை முடித்திருந்தார். இதில் இரண்டு கருத்தியலாளரைக் காட்டியுள்ளார் 'இந்தத் தேகத்தை நான்' எனப் பேசிய ஒரு அணியினர்; அவர்கள் நாத்திகர். 'கடவுள், சிவம், பிரம்மத்தை நான்' எனப் பேசியவர்கள் இன்னொரு அணியினர்; அவர்கள் வேதாந்திகள். இந்த இரண்டு கருத்தியலாளரும் பாரதியாருக்கு முன்பு 1875 முதலே தமிழகத்தில் வாழ்ந்திருந்தனர்.*

*பாரதியார் வாழ்ந்த போதும், அதற்கு முன்பும், இந்தப் பிரபஞ்சம் எல்லாம் சுவப்நம் போலவும், இந்திர ஜாலம் போலவும் பொய்யானது*

என்றும், பிரம்மம் மட்டுமே உண்மை என்றும் கூறும் பயிற்சி பெற்ற வேதிய வேதாந்திகள் இருந்தனர் (ஆரியமத சித்தாந்த சங்கிரகம். 68). அதற்கும் முன்பு 1875-1880ஆம் ஆண்டுகளில் உடலை, தேகத்தை நான் எனப் பேசிய நாத்திகர் நாகப்பட்டினத்திலும் சென்னையிலும் வாழ்ந்தனர். நான் என்றால் உயிருடனும், உணர்வுடனும் உள்ள இந்த தேகமே என்று அவர்கள் கூறினர். உடல் என்ற இந்தத் தேகமானது மண், தீ, காற்று, நீர் ஆகிய பூதப் பொருள்களால் ஆக்கப்பட்டுள்ளது. இந்தப் பூதப் பொருள்களாலேயே மரம், செடி, கொடிகள் போன்ற தாவரங்களும், மீன், ஆடு, மாடுகள் போன்ற விலங்குகளும் உண்டாக்கப்பட்டுள்ளன. சடப் பொருள்களின் கலப்பால் சித்துப் பொருள்கள் உற்பத்தியாகும் என்பது இவர்கள் கொள்கை. உலகில் உள்ள பொருள்களே முதன்மையானவை. அறிவு, உணர்வு, மனம், ஆன்மா என்பவை உயிர்ப் பொருள்கள். இவை சடப் பொருள்கள் இருப்பதனாலேயே உண்டானவை. பிரபஞ்சமும், உலகியல் பொருள்களும் இருப்பதனால் இவற்றிலிருந்தே இந்த நான்கும் உண்டாகி உள்ளன எனக் கூறினர். சதை (ஊன்), எலும்பு, இரத்தம், நரம்பு, மூளை ஆகியவற்றால் ஆன உடலை நான் என்றனர். மனிதத் தன்மை, பிராமணத் தன்மைகள் என்பன ஸ்தூல சரீரத்தில்தான் இருக்கின்றன. ஆதலால் ஸ்தூல சரீரம் என்பதே நான் என்னும் அறிவுக்கு விஷயமாதலால் சரீரமே ஆத்மாவாம் என்ற பேச்சானது 1900க்கு முன்னும் பின்னும் நான்கு வேதங்களைத் தழுவிய வேதாந்திகளிடையே இங்கு வழக்கில் நிலவியது (ஸ்ரீவிசாரசாகரம். ப. 261). அப்போது இது பௌதிக வாதம், சார்வாகம், தேகாத்ம வாதம் எனப்பட்டது. இந்தக் கருத்தியலாளர்கள் அப்போது 'இந்து சுயக்கியான சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி இருந்தனர். 'இந்து சுதந்தர சிந்தனையாளர் சங்கம்' (Hindu Free Thought Union) என்பது இதன் அர்த்தமாகும்.

தத்துவார்த்த ஆராய்ச்சியாளர் என்பது இதன் பொருள். இதன் ஆசிரியர் திரு சோமையா என்பவர், உலகமானது கடவுளால் படைக்கப்படவில்லை என்றும், பஞ்சபூதங்களால் ஆனது என்றும் நாத்திகப் பொருள்முதல் வாதக் கண்ணோட்டத்தில் அந்த வார இதழில் கட்டுரைகள் எழுதினார்

இந்தச் சங்கத்தின் சார்பாக 1878 ஜனவரியில் 'தத்துவவிசாரிணி' என்ற வார இதழ் வெளிவந்தது. தத்துவார்த்த ஆராய்ச்சியாளர் என்பது இதன் பொருள். இதன் ஆசிரியர் திரு சோமையா என்பவர், உலகமானது கடவுளால் படைக்கப்படவில்லை என்றும், பஞ்ச பூதங்களால் ஆனது என்றும் நாத்திகப் பொருள்முதல் வாதக் கண்ணோட்டத்தில் அந்த வார இதழில் கட்டுரைகள் எழுதினார். யாழ்ப்பாணச் சைவரான ச. சபாரத்தின முதலியார் 1878இல் உதயபானு (ஆசிரியர் நல்லூர் சு. சரவணமுத்துப் பிள்ளை) என்னும் இதழில் சோமையாவின் கருத்தை மறுத்து எழுதினார். சேலம் பகடால. நரசிம்மலு நாயுடு சென்னையில் கடவுள் உண்மை பற்றி உரையாற்றினார். தத்துவ விசாரிணி இதழில் இந்த உரைக்கு மறுப்புக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. இவற்றைப் பெங்களூர் பிரம்ம சமாஜத்தினர் படித்தனர். 1879 இல் கோயம்புத்தூரிலிருந்து அங்குச் சென்ற சேலம் பகடால. நரசிம்மலு நாயுடுவிடம் தத்துவ விசாரிணியில்

வெளிவந்த கட்டுரைகளைக் காட்டினர். அவர் 31-5-1879, 31-5-1880, 1-6-1880 ஆகிய நாட்களில், 'உலகம் கடவுளால் சிருட்டிக்கப்பட்டது என்று அங்கிருந்த 'பிரஹ்மோபாசனா' சாலையில் உரையாற்றினார். மேலும் சூளை சோமசுந்தர நாயக்கர் 'சித்தாந்த ரத்நாகரம்' நூலிலும் தத்துவ விசாரிணியின் கருத்துக்களை மறுத்து எழுதினார்.

'இந்து சுயக்கியான சங்கத்தார்' 1882இல் அந்த வார இதழைத் 'தத்துவவிவேசினி' என்ற பெயரில் வெளியிட்டனர். 'உண்மையை விளங்கச் செய்யும் பத்திரிகை' என்று இதற்குப் பொருள். ஒரு இதழ் விலை ஒரு அணா. அப்போது ஒரு பவுன் தங்கத்தின் விலை பத்து ரூபாய் (14-3-1886). இத்தாலிய வானவியல் விஞ்ஞானியான ஜியார்டானோ பூரூனோ கத்தோலிக்க குருபீடத்தால் 1600இல் எரிகம்பத்தில் உயிருடன் கட்டி எரிக்கப்பட்ட 282ஆவது ஆண்டின் நினைவாக இந்த இதழை வெளியிட்டனர்.

ஒரு இதழ் விலை ஒரு அணா. அப்போது ஒரு பவுன் தங்கத்தின் விலை பத்து ரூபாய் **(14_3_1886)**. இத்தாலிய வானவியல் விஞ்ஞானியான ஜியார்டானோ பூரூனோ கத்தோலிக்க குருபீடத்தால் **1600**இல் எரிகம்பத்தில் உயிருடன் கட்டி எரிக்கப்பட்ட **282**ஆவது ஆண்டின் நினைவாக இந்த இதழை வெளியிட்டனர்

## முதன்மைக் கருத்துகள்

இந்த இதழின் ஆசிரியர் தமிழ்ப் பேராசிரியர் பு. முனிசுவாமி நாயகர். இவருக்குத் துணையாக அமரம்பேடு முத்துசாமி முதலியார் மற்றும் தெய்வசிகாமணி ஆகியோரும் எழுதினர். இவர்கள் வேதாந்தம், சைவம், கிறித்தவம், பிரம்ம சமாஜம், முகமதியம், பார்சி, சீக்கியம், சமணம், பௌத்தம் ஆகியவற்றைப் பற்றி அறிந்திருந்தனர். அடையாறு தியசாபிகல் சொசைடி பற்றியும் அறிவர். மேலே கண்டவற்றை Materialsm, Idealsm, Pantheism என்ற வகைகளில் உணர்ந்து விளக்கம் கொண்டிருந்தனர்.

அப்போது அவர்களது கருத்துக்கள் பின்வருமாறு இருந்தன (தத்துவ விவேசினி. 13-1-1884).

பிரபஞ்சமானது உண்மையாகவே இருப்பது. அதனாலேயே நமது கண் பார்வையினுள் அது படுகிறது. பிரபஞ்சம் சதாகாலமும் உள்ளது. ஆதலால் அது அநாதி நித்தியம். அது எல்லையற்றது. அகண்டமானது. முக்காலமும் உள்ள பரிபூரணமானது. அதுவாகவே சுயமாக இருக்கிறது. கடவுளால் படைக்கப்பட்டது அன்று. அது தவிர இன்னொரு பரிபூரணப் பொருள் அதாவது கடவுள் இல்லை. உண்டு என நிரூபிப்பது அசாத்தியம். மனிதன் மேன்மையானவன். மனிதன் பாவி அன்று என 10-1-1884, 16-3-1884, 26-9-1886ஆம் நாள் இதழ்களில் எழுதினர்.

## அணுகுமுறை

இந்தக் கருத்தியல் உண்மைகளை அடைய அவர்கள் இப்படியான அணுகு முறையைக் கைக்கொண்டனர் (10-2-1884).

ஐம்பொறி, புலன்களால் அறியப்படுவதே பொருள் அல்லது விசயம். பொருள், விசயங்களுக்கு வடிவம், பெயர் உண்டு. காணப்படும் பொருள், விசயங்களை நம்புவதே நம்பிக்கை. இறுதியான நம்பிக்கை.

உலகில் காணப்படும் பொருள், விசயங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாக இருக்கின்றன. அவை இடைவிடாது மாறிக்கொண்டே உள்ளன.

இப்படியான பொருள், விசயங்கள் மனிதர்களுக்கு அறிவைத் தருகின்றன. வடிவமும், உடலும் இல்லாத பொருள்களுக்கு அறிவு இல்லை. அப்படி அறிவுள்ள பொருள் அதாவது கடவுள் எங்கும் இல்லை. மனித சித்தம் சுதந்திரமானது (8-2-1888).

ஆங்கிலக் கல்வி ஊன்றிய நாத்திக வேர்களுடன் உத்தியோகம் பார்த்த கும்பகோணம் பேராசிரியர் சுந்தரராமன் தாம் அரசு கல்லூரியில் போதித்த வழிகள் எல்லாம் சுத்த நாஸ்திக வாதம் என்று பின்னாளில் உரைத்தார் (வேதாந்த தீபிகை, மே **1924**). மெக்காலே கல்வித்திட்டத்தால் அப்படி நாத்திகரானவர்களில் இவருடைய பெயர் தான் இன்று சரியாக அறிய வருகின்றது

இது இந்தியமரபிலும் தமிழ் மரபிலும் உலகாயதம் எனப்படும். இதனை நம்மாழ்வாருடைய திருவாய்மொழி முன்னுரையில் ஜீயர் ‘லோகே ஆயதம்’ எனப் பிரித்து, உலகினில் பரவலாக நடப்பினில் உள்ளது என்று விளக்கம் கூறினார். மேலும் உலகு அல்லது நாட்டு இயல்பு என்று அழகிய மணவாளப் பெருமாள் தம்முடைய ஆச்சாரிய ஹிருதயத்தில் (93-94) சுட்டிக் காட்டினார்.

## அப்போதைய தத்துவ நிலைமை

1835 முதல் மெக்காலே கல்வித்திட்டம் பொலிந்த கல்விச்சாலைகள் நிறுவப்பட்டன. இவற்றில் உயர்கல்வி கற்ற இந்திய இளைஞர்கள் பெருநகரங்களில் உலா வந்தனர். இவர்கள் அங்குக் காம்டே, ஹியூம், ஹேமில்டன், பக்கில், ஹெர்பர்ட் ஸ்பென்சர், ஜே.எஸ். மில், அன்னிபெசண்ட், காலின்ஸ், சார்லஸ் பிராட்லா ஆகியோருடைய கருத்தியல்களில் பயிற்சி பெற்றும் இருந்தனர். இவர்கள் அனைவரும் நேர்க்காட்சி வாத வழிப்பட்ட நாத்திகத்தைக் கைக்கொண்டவர்கள் ஆவர். ஆங்கிலக் கல்வி ஊன்றிய நாத்திக வேர்களுடன் உத்தியோகம் பார்த்த கும்பகோணம் பேராசிரியர் சுந்தரராமன் தாம் அரசு கல்லூரியில் போதித்த வழிகள் எல்லாம் சுத்த நாஸ்திக வாதம் என்று பின்னாளில் உரைத்தார் (வேதாந்த தீபிகை, மே 1924). மெக்காலே கல்வித்திட்டத்தால் அப்படி நாத்திகரானவர்களில் இவருடைய பெயர் தான் இன்று சரியாக அறிய வருகின்றது. கூடவே லூயிஸ் ஹென்றி மார்க்கன், சார்லஸ் டார்வின் ஆகியோருடைய குடும்பம் மற்றும் மனிதன் பற்றிய பரிணாமக் கொள்கைகளிலும் தேர்ந்து இருந்தனர். மேலும், ஃப்ரான்சிஸ் பேகன், ஹாப்ஸ், புஹ்னர் முதலியவர்கள் போதித்த பொருள்முதல் வாதக் கொள்கைகளை அந்தக் கல்விவழியாகப் பெற்று அவற்றின் வழியில் உணர்வைச் செலுத்தினர். ஆட்சியிலும் சிறிது சிறிதாகப் பங்கு பெற்றனர்.

இது கண்டு ஆத்திக நெஞ்சம் பூத்த மூத்தவர் வாட்டம் கொண்டனர். ஆங்கிலக் கல்வி கற்ற இளைஞர்கள் நாத்திகர் ஆவது குறித்துப் பத்திரிகைகளிலும் நூல்களிலும் தமது உணர்வுகளைப் பதிவு

‘தத்துவ விவேசினி’ இதழின் உலகாயதத்தை மறுத்துவிட்டுப் பின்னர் சைவருடைய வாதங்களுக்கு மறுப்பு வெளியிட்டபடி தமது வேதாந்தத்தை நிறுவ முற்பட்டனர். வேதாந்திகளும் சித்தாந்திகளும் **1874** மற்றும் **1886** ஆம் ஆண்டுகள் தொடங்கி **1898** ஆம் ஆண்டு முடிய விவாதங்களை நிகழ்த்தினர். இது ஆங்கிலக் காலனி ஆட்சியில் நடைபெற்ற முக்கியமான, சிறப்பமைந்த மெய்யியல் விவாதம்

செய்தனர். ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ புதினத்தில் தமது ஆத்திக நோக்கில் மயூரம் வேதநாயகம் பிள்ளை அந்த நாத்திகத்தைக் கடிந்துரைத்தார். கோயம்புத்தூரில் சே. ப. நரசிம்மலு நாயுடு ‘ஆஸ்திக மத சித்தாந்தம்’ என்று தமது பெங்களூர் சொற்பொழிவை நூலாகப் பதிப்பித்தார். சிதம்பரத்தில் ‘பிரம்மவித்யா’ என்ற இதழை கே. சீனிவாச சாஸ்திரி நடத்தினார். நாகப்பட்டினத்தில் இருந்து ஜி. சதாசிவம் பிள்ளை ‘மீனலோசனி’ என்ற பத்திரிகையை வெளிக் கொணர்ந்தார். இவர்கள் முதலில் இங்கு உலா வந்துகொண்டிருந்த நாத்திகத்தை மறுத்துவிட்டுத் தத்தமது நெறிகளை நிறுவிக் காட்டினர். அப்போது கிறித்தவர், பிரம்ம சமாஜத்தினர், வேதாந்திகள், சித்தாந்திகள் முன்னிலையில் நின்றனர்.

கிறித்தவத் திருச்சபையினர் தமது செமித்திய மரபிற்குட்பட்டுச் ‘சத்தியவேத பரிட்சை’, ‘சமய பரிட்சை’, ‘வேத அகராதி, முதலிய நூல்களிலும் ‘சத்திய தூதன்’ இதழிலும் நாத்திக மறுப்பை வெளியிட்டுவிட்டுப் பின்னர் தமிழக அனைத்திறைக் கொள்கைக் கருத்தியல்களையும், வேதாந்தத்தையும் மறுத்துத் தமது சுவிஷேசத்தை அறிவித்தனர். சைவ நெறியினர் தேவாரம், திருவாசகம், சிவஞான போதம், பதினான்கு சைவ சாத்திரங்கள் முதலிய நூல்களில் ஞானம் நிறைந்தவராக நிலவினர். சைவ சித்தாந்தத்தினர் 1870ஆம் ஆண்டிலிருந்து ‘உதய பானு’ இதழிலும் ‘சித்தாந்த சேகரம்’, ‘பிரபஞ்ச விசாரம்’ முதலிய நூல்களிலும் சுயக்கியான சங்கத்தாருடைய உலகாயத நாத்திகத்தை முதலில் மறுத்துவிட்டு, பின்னர் சங்கரருடைய அத்வைத வேதாந்தத்தினையும் மறுத்தனர். சங்கர அத்வைத நெறியினர் வேதம், ஸ்மிருதிகள், வேதாங்கங்கள், உபநிஷத்துக்கள், மீமாம்சை, தர்க்கம், இதிகாசங்கள், புராணங்கள் ஆகியன முதன்மையானவை என்றும் மேன்மையானவை என்றும் எண்ணம்கொண்டு விளங்குபவர்கள். அவர்கள் ‘தத்துவ விவேசினி’ இதழின் உலகாயதத்தை மறுத்துவிட்டுப் பின்னர் சைவருடைய வாதங்களுக்கு மறுப்பு வெளியிட்டபடி தமது வேதாந்தத்தை நிறுவ முற்பட்டனர். வேதாந்திகளும் சித்தாந்திகளும் 1874 மற்றும் 1886 ஆம் ஆண்டுகள் தொடங்கி 1898 ஆம் ஆண்டு முடிய விவாதங்களை நிகழ்த்தினர். இது ஆங்கிலக் காலனி ஆட்சியில் நடைபெற்ற முக்கியமான, சிறப்பமைந்த மெய்யியல் விவாதம் ஆகும். சைவ சித்தாந்தத்தினர் தம்முடைய ‘உதயபானு’, ‘இந்து சாதனம்’, ‘இந்து ஜன பூஷணி’, ‘ஞானாமிர்தம்’, ‘மகாவிகட தூதன்’, ‘சித்தாந்த தீபிகை’, ‘விஜயத்துவம்’, ‘விவேக திவாகரன்’, ‘திராவிட மந்திரி’, ‘மீனலோசினி’ ஆகிய இதழ்களில் எழுதினர். சிறு பிரசுரங்களும் வெளியிட்டனர். வேதாந்திகள் தமது ‘சுதேசமித்திரன்’, ‘பிரம்ம வித்யா’, ‘ஆரிய ஜனப் பிரியன்’, ‘பிரம்மவாதினி, ஆகிய இதழ்களில் எழுதினர். சிறு நூல்களாகவும் வெளியிட்டனர். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அறுபத்தொரு மெய்ஞ்ஞானக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. (ஆதாரம் மற்றும் பார்வை நூல்களில் 3, 4, 8, 11, 13, 14 எண்ணிடப்பட்ட

நூல்களில் உள்ளவை) இவை பதினாறு ஆண்டு கால விவாதத்தில் உதித்தவை. இந்த விவாதம் நுண்மாண் நுழைபுலம் மிக்கது.

இந்த விவாதம் மூன்று கட்டங்களில் நடந்தது. 1886-1893 ஆண்டுகளில் மெய்கண்டார் சைவ சித்தாந்த மரபினரும் சங்கர அத்வைதத்தினரும் தத்தம் நெறி நின்று வாதிட்டனர். சூளை சோமசுந்தர நாயக்கரும், சிதம்பரம் கே. சீனிவாச சாஸ்திரியும் சொல்லாடிக் கொண்டனர். 1894-1896 ஆண்டுகளில் பஞ்சதச பிரகரணம், திருமந்திரம், பிரபஞ்ச விசாரம் பற்றித் தத்தமது நெறிகள் தழுவியபடி எதிர் எழுத்துரையாடினர். யாழ்ப்பாணம் கோவைச் சபாபதி நாவலர், செந்திநாதையர் ஆகிய இருவரோடு சிதம்பரம் கே. சீனிவாச சாஸ்திரி எதிரிட்டுக் கொண்டார். 1896-1898 ஆம் ஆண்டுகளில் திருக்குறளின் முதற் குறளை முன்னிட்டுக் கொண்டு தத்தமது மெய்யியலை வலியுறுத்தினர். நாகை ஜி. சதாசிவம் பிள்ளை, பல்லாவரம் வேதாசலம் பிள்ளை (முருகவேள்- மறைமலைஅடிகள்) ஆகியோருடன் சிதம்பரம் கே. சீனிவாச சாஸ்திரி, அழகிய சிங்கப் பெருமாள் (பிரம்மவாதினி) ஆகியோர் முரண்பட்டுச் சொல்லாடினர். வேத நிந்தை, வைதிக நிந்தை, சமஸ்கிருத நிந்தை, வேதாந்த நிந்தை, தமிழ் மொழி, இன உணர்வுகள் ஆகியன சைவத்தரப்பில் மேலோங்கி விளங்கின. இவற்றில் நேர்க்காட்சி வாதமானது (Positivism) தத்துவமாக இழையோடிப் பொலிவு அளித்தது. 1892ஆம் ஆண்டில் விவேகானந்தர் வருகைக்குப் பின்னர் வேதாந்தத்தில் அகவய அத்வைதம் மற்றும் புறவய அத்வைதம் என்பன தெளிவாயின. இராஜம் ஐயர் கருத்துப்படி இந்தியாவின் தேசிய தத்துவம் வேதாந்தம் எனப்பட்டது. அதில் தேசிய விடுதலை, சுயராஜ்யம் என்பன கருக்கொள்ளத் தொடங்கின. இவற்றில் அனைத்திறை வேதாந்தமானது தத்துவமாக இழையோடிப் பொலிவு அளித்தது. 1898ஆம் ஆண்டில் மூன்றாம் கட்ட வாதம் முடிவுக்கு வந்தது. அந்த நூற்றாண்டும் இப்படியாக நிறைவு கண்டது. இந்த வரலாற்றுப் போக்கில் மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார் தேசிய விடுதலை பொலிந்த அனைத்திறை வேதாந்தியாகவும், பொதுவுடைமை ஆதரவாளராகவும் திகழ்ந்தார். இவருடைய சமகால மூத்தவரான சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலு செட்டியார் உலகாயத நாத்திகராகவும், இந்தியாவின் முதல் பொதுவுடைமையாளராகவும் தமிழகத்தில் விளங்கினார்.

**வேத நிந்தை, வைதிக நிந்தை, சமஸ்கிருத நிந்தை, வேதாந்த நிந்தை, தமிழ் மொழி, இன உணர்வுகள் ஆகியன சைவத்தரப்பில் மேலோங்கி விளங்கின**

## இந்திய சுதந்திரச் சிந்தனையாளர் திறன்

இந்து சுயக்கியானச் சங்கத்தார் சென்னையில் அப்போது இருந்த 'மதராஸ் செக்யூலர் சொசைடி'யுடன் நட்பு கொண்டனர். இந்த அமைப்பானது இலண்டனில் பிரபலமாக நிலவிய 'நேஷனல் செக்யூலர் சொசைடி'யுடன் இணைந்து இருந்தது. சோஷலிசக் கொள்கையாளரான இராபர்ட் ஓவன் 1852 முதல் அங்கு

நகரங்கள்தோறும் இந்த அமைப்பிற்குக் கிளைகள் நிறுவி இருந்தார். அப்போது சார்லஸ் பிராட்லா (1833-1891) புராட்டஸ்டண்ட் கிறித்தவ மரபாளராக இருந்தபடியே கிளாஸ்கோ நகரில் இருந்த கிளையில் உறுப்பினராகிச் சமயச் சார்பை எதிர்த்தார். நாடாளு மன்றத்தில் கடவுளின் பெயரால் பதவியேற்பு உறுதிமொழி செய்ய மறுத்தார். அந்த வகையில் சென்னையிலும், கல்கத்தாவிலும் பரபரப்பாகப் பேசப்பட்டார். அவருடைய ஆதரவாளர்கள் சென்னையிலும் இருந்தனர். அவரும் சென்னைக்கு வந்து சென்றார். (30-01-1891 அன்று அவருடைய இறுதி யாத்திரையில் சென்ற 3000 பேரில் மகாத்மா மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியும் ஒருவர்.) அப்போது சென்னையில் வாழ்ந்த திரு அப்ஷன் துரையும் சில யுரேஷியரும் 'மதராஸ் செக்யூலர் சொசைடி' என்ற சபையை ஏற்படுத்திக் கொண்டனர். இலண்டன் சபையுடன் இணைந்தனர். அதன் பிறகு ஆங்கிலோ-இந்தியர் (யுரேஷியர்) இந்து சுயக்கியான சங்கத்தில் அதிகமாக இணைந்தனர். ஆதலால் இச்சங்கத்தார் அதன் பிறகு 'சென்னை லௌகிக சங்கம்' என அதன் பெயரை மாற்றிக் கொண்டனர் (தத்துவ விவேசினி 13-2-1887). லௌகிகம் என்பதனை உலகுக்குரியது என்ற பொருளில் கையாண்டனர்.

நாடாளு மன்றத்தில் கடவுளின் பெயரால் பதவியேற்பு உறுதிமொழி செய்ய மறுத்தார். அந்த வகையில் சென்னையிலும், கல்கத்தாவிலும் பரபரப்பாகப் பேசப்பட்டார். அவருடைய ஆதரவாளர்கள் சென்னையிலும் இருந்தனர். அவரும் சென்னைக்கு வந்து சென்றார்

1886ஆம் ஆண்டு முதல் மதராஸ் செக்யூலர் சொசைடியைச் சேர்ந்த அப்ஷன் துரை தத்துவ விவேசினியின் சந்தா விவரங்களைக் கவனித்துக் கொண்டார். பு. முனிசுவாமி நாயகர், அமரம்பேடு முத்துசாமி முதலியார் மற்றும் தெய்வசிகாமணி ஆகியோர் கட்டுரை, விவாதம், செய்திகள், கடிதங்கள் ஆகியவற்றிற்குப் பொறுப்பு ஏற்றனர். 1880-1881இல் முனிசுவாமி நாயக்கர் குருசாமி நாயக்கரோடும், புதுவையில் 17-10-1886இல் ஞானப்பிரகாச முதலியாரோடும் மேடை விவாதம் புரிந்தனர். மேலும் பெண் கல்வி, விக்கிரக வணக்கம், பலி இடுதல், சோதிடம், புராணம் பற்றிய விமரிசனக் கட்டுரைகளையும் எழுதினர். ஆலயங்களில் தேவதாசி முறையை எதிர்த்தனர். திருச்சபைச் சான்றோர்களும் பெப்ரிசியஸ் காலத்திலிருந்தே இப்படிப் பேசிக்கொண்டு தமிழகத்தில் நிலவினர். சுயக்கியான சங்கத்தார் 'பாபப்பட்ட ஆன்மா' மற்றும் 'வானுலக மோட்சம்' பற்றி எதிர்வினா தொடுத்தனர். மேலும் அப்போதைய இந்திய வரிப் பணத்தில் பதினாறில் ஒரு பங்கு திருச்சபைத் தொண்டுக்கு அளிக்கப் படுவதையும் சுட்டிக் காட்டினர். அப்போதைய ஆங்கிலேய அரசு உப்புக்கு வரி விதித்தது. உப்பில்லாமல் உயிர் வாழ இயலாது. உப்புக்கு வரி என்றால் அது உயிருக்கு வரி என்று தத்துவவிவேசினி (4-12-1881) இதழில் எழுதினர். தமது இந்து சுயக்கியான சங்கத்தில் இணைந்து பணியாற்றினால் மதமாற்றமும், அந்தணர் சடங்குகளும் நின்று போகும் என்று பிரசங்கித்தனர்.

அன்னி பெசண்ட் அம்மையார் இங்கிலாந்தில் இருந்தபோது அங்கு இருந்த மால்தூசிய ஐக்கிய சங்கத்தில் பங்கு பெற்று இருந்தார். அப்போது அவர் எழுதிய கட்டுரை ஒன்றைப் 'பிரஜா விருத்தப் பிரகடனம் - இதனால் விளையும் பயன்' என்ற தலைப்பில் தத்துவவிவேசினி இதழில் தமிழில் வெளியிட்டனர். அந்தக் கட்டுரையில் ஜெர்மனி பொதுவுடைமையாளர் பற்றிப் பேசப்பட்டு இருந்தது (16-3-1884). அதில் அவர்களது 'சோசலிசம்' என்ற சொல்லைப் 'பயங்கரமான சர்வஜன சமானத்துவம்' என்று மொழிபெயர்த்தனர்.

அப்போது சென்னை லௌகிகச் சங்கத்தினர் கைத்தொழில் என்பது மனிதர் தங்கள் கைகளால்புரியும் வேலைகள் என்றாலும், இயந்திரங்களால் செய்யப்படும் வேலைகளும் அடங்கும் என அறிந்தும் இருந்தனர் (17-2-1884). தொழிலாளர் வல்லமைகளைத் தெரிந்தும் இருந்தனர் (4-4-1886).

இந்தியத் தொழில் வித்துவர்கள் மகா நிபுண சிரோமணிகள். நவநவமாகப் பொருள்களைச் செய்வதில் சமர்த்தர். ஐரோப்பியப் பொருள்கள் இங்கே நிரம்பியதால் இந்து கைத்தொழிலாளர் வறுமைக்கு ஆளாகி உள்ளதை இந்து சுயக்கியான சங்கத்தார் கண்டனர்

அந்த நாட்களில் இந்தியாவில் கடிகாரம், இரும்பு, பித்தளைத் தொழில், இரயில், கப்பல், வண்டிகள், பருத்தி அரைவை இயந்திரம், பஞ்சினை அழுத்திப் பேல்கள் ஆக்கும் இயந்திரம், மாவரைத்தல், அரிசியந்திரம், சர்க்கரை, பட்டு நெசவு, நூல் சாலைகள், சணல், கம்பளி, தோல்பதனிடுதல், எண்ணெய் பிழிதல், அரக்கு மெழுகு, அவுரி நீலம் சாலைகள், தந்தி அனுப்பும் கருவி, துப்பாக்கி, மருந்தினை உடலுக்குள் செலுத்தும் ஊசி ஆகியன வழக்கில் பிரபலமாக இருந்தன. இவை நீராவியின் சக்தியால் நடத்தப்படும் தொழில்கள் (செந்தமிழ், பராபவ, மாசி இதழ்). இது அந்த நூற்றாண்டின் உயர்ந்த சிறப்பு ஆகும். ஆகாயவிமானம், மின்சார ரயில் பெட்ரோல், துணி வெளுக்கும் இயந்திரம், புகைப்படக் கருவி, ஒலிப்பதிவுக் கருவி, மனித ஈரலை உள்ளே இருந்து காட்டும் மின்னொளிக் கருவி பற்றிய தகவல்களை இங்கிலாந்து செய்தித் தாள்கள்வழிப் பெற்றிருந்தனர். சற்றுப் பிற்காலத்தில் 06, 07, 08-04-1911 ஆகிய மூன்று நாட்கள் இராமநாதபுரம் மாவட்டம், பாலயம்பட்டியில் 'வித்தியா காட்சிச்சாலை' (பொருட்காட்சி) நடத்தப்பட்டது. அதில் மேற்கூறப்பட்ட பொருட்கள், சுயத்திறமை மற்றும் அறிவைப் புலப்படுத்தும் பொருட்கள், விவசாய உபகரணங்கள், விளைபொருட்கள், கைத்தொழில் மற்றும் நவீன உபகரணங்கள், இயந்திரங்கள், சுதேச இசைக்கருவிகள், சுதேச உடற்பயிற்சிகள் காட்சிக்கு உட்படுத்தப் பட்டன (செந்தமிழ், சாதாரண, மார்கழி).

இந்தியத் தொழில் வித்துவர்கள் மகா நிபுண சிரோமணிகள். நவநவமாகப் பொருள்களைச் செய்வதில் சமர்த்தர். ஐரோப்பியப் பொருள்கள் இங்கே நிரம்பியதால் இந்து கைத்தொழிலாளர் வறுமைக்கு ஆளாகி உள்ளதை இந்து சுயக்கியான சங்கத்தார் கண்டனர். ஆனால் ஆங்கிலேயத் தொழில் நிபுணர்கள் இந்து தனவான்களை நோக்கித் தொழிற்சாலை இயந்திரம் வரவழைத்து

நடப்புவித்துத் தொழிலாளர்களை ஆதரித்துத் தேச விருத்தி செய்யும்படி சிபார்சு செய்தனர். இதைக் கண்டு அந்தச் சங்கத்தார், 'நாமே இயந்திரம் செய்தால் ஊதியம் பரமாகாது. நீராவிக் கப்பலைச் செய்திருந்தால் ஐரோப்பா தலைகாட்டி இருக்காது. நம்மவரே புசிக்கலாம். அப்போது அந்தப் பணம் நம் தேசத்தில்தானே இருக்கும்' என்றனர்.

'இந்துத் தொழிலாளிகள் சீமை உளி, சீமை இழைப்புளி, சீமைவாய்ச்சி, நாட்டு உளிகள் கொண்டு நாணயமாய்ப் பொருள்களைச் செய்கின்றனர். மகா நிபுண சிரோமணிகளான இந்து கைத்தொழில் வித்துவர், ஆங்கிலேயரால் விளைந்த வறுமையினால் மெத்தவும் நொந்து அழுக்கு வஸ்திரம் உடுத்தி மேல் பார்வைக்கு மெத்தவும் சாமான்யர்களாய் இருக்கின்றார்கள்' என எழுதினர். (இதுகண்டு அமரம்பேடு முத்துசாமி முதலியார் நம்பிக்கை விரவிய பெருமித தமாஷாக "ஒரு இந்து தொழில் வித்துவர் பத்து ஆங்கிலேய பார்லிமெண்ட் மெம்பர், பத்து அமெரிக்கத் தொழில் வித்துவர், பதின்மூன்று சேக்ஸ்பியர், ஒரு லட்சம் கம்பர்லாந்து மக்கள் சேர்ந்த கூட்டத்திற்கு இணையானவர்" என்று எழுதினார்(4-4-1885).

"ஒரு இந்து தொழில் வித்துவர் பத்து ஆங்கிலேய பார்லிமெண்ட் மெம்பர், பத்து அமெரிக்கத் தொழில் வித்துவர், பதின்மூன்று சேக்ஸ்பியர், ஒரு லட்சம் கம்பர்லாந்து மக்கள் சேர்ந்த கூட்டத்திற்கு இணையானவர்"

### அவர்களது பொருள் முதல் வாதம்

இவற்றின் அடிப்படையில் இந்து சுயக்கியான சங்கத்தார் மனிதத் தன்மை பற்றிய உயர்வான சிந்தனைக்கு வந்தனர் (16-3-1884).

மனிதனது உயர்வான தன்மை எனப்படுவது இயன்ற வரைக்கும் தானும், பிறரும் இந்த உலகினில் இன்புற்று இருப்பது, செயல்புரிவது.

மனிதத் தன்மை என்பதானது மனக் கற்பனையில் உருவாக்கப்பட்ட கடவுளை எதிர்பார்க்காது. மனிதனையே தனக்குத் தோழனாகவும். தொழிலாளியாகவும் கொள்ளும் உரிமை உடையது.

மதங்கள் மனிதனின் ஏற்பாடு. கண்ணால் காணாத சுவர்க்கத்தில் இன்பம் அனுபவிக்கப் போகிறோம் என்பதை விட, இந்த உலகத்திலேயே கண்கூடாகப் பிரத்தியட்சமாகச் சுக விருத்திகளை உண்டாக்குவது சிறந்தது.

உலகத்து இன்பசுகங்களை நீதி வழியினில் அடைய வேண்டும். அதோடு ஜனங்களின் பொருட்டு நன்மையைப் பெருக்குவது மனிதனது கடமை, தொழில்.

இந்த உணர்வோடு அப்போது அவர்கள் எடுத்து உரைத்த கொள்கைகளாவன இப்படி விளங்கின. அது காரல் மார்க்ஸின் மெய்ஞ்ஞான காலமாகும்.

1. மனிதன் சிரேஷ்டகன். மனுஷீகத்துவம் உடையவன்(11-3-1885).

2; கடவுள்-இது மனிதரால் சிருஷ்டிக்கப்பட்டது. இக்கடவுளுக்கு மனிதரால் குணங்கள் அளிக்கப்பட்டு உள்ளன(11-4-1885).

3. மனிதச்செயல்கள் ஆதிபூர்வமாய் அமைந்தது. இயற்கை அறிவு உடையது. சகல மனிதச் செயல்களும் பகுத்தறிவில் (ஆன்மாவில்) இருந்து உண்டாகின்றன என்பது சரி அன்று(27-6-1885).

4. பொருள்-இது நியாய-வைசேடிக தர்க்க சாஸ்திரத்தில் உள்ள பதார்த்தம் என்கிற சொல் அன்று. பதார்த்தம் பொருள் ஆகாது. பதார்த்தத்தில் ஒன்பது திரவியங்கள் அடங்கும். பொருள் அடங்காது (20-3-1887).

5. பொருள் முன்னது. அறிவு பின்னது. புறநிலைப் பொருளில் இருந்து அறிவு உண்டாகிறது (26-9-1886).

கண் - பார்ப்பதற்குச் செய்யப்பட்டது அன்று. உண்டாக்கப்பட்டது அன்று. கண் என்பது இருப்பதாலேயே பார்க்கிறோம். நேரடி பிரத்தியட்சமும், பரிசோதனையுமே உண்மையான அறிவுக்கு வித்து

6. தேகமே ஆத்மா. உடலும் ஜீவனும் வேறுவேறு அல்ல. இரண்டும் ஒன்றே. விறகு நெருப்பு வேறுவேறு இல்லை என்று இரசாயன சாஸ்திரம் கொண்டு நிறுவினர். (31-1-1885). இது தேகாத்ம வாதம். (இஃது இந்தியத் தத்துவ வரலாற்று வழிப்பட்டது, வீறார்ந்தது. இதனை வெல்லவே சைவம், வேதாந்தம் மற்றும் செமித்திய மரபு அறிஞர் அனைவரும் அன்றிலிருந்து இன்றுவரை தத்தமது ஆன்மிகச் சிந்தனைகளை உருவாக்கித் தத்துவ வரலாற்றில் வளம் சேர்த்தபடியாகப் பெருமிதம் கொண்டனர்).

7. கண் - பார்ப்பதற்குச் செய்யப்பட்டது அன்று. உண்டாக்கப்பட்டது அன்று. கண் என்பது இருப்பதாலேயே பார்க்கிறோம். நேரடி பிரத்தியட்சமும், பரிசோதனையுமே உண்மையான அறிவுக்கு வித்து (21-11-1886, 19-12-1886, 13-3-1887).

8. இயற்கை உலகில் சகலமும் பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டு வாழ்கின்றன (22-01-1888).

9. இந்தியத் தொழில் வித்துவர் (தொழிலாளர்) வல்லமை படைத்தவர் (4-4-1885).

10. உலகம் முழுவதுவுமே எனது தேசம், நன்மை செய்வதே எனது மதம் (22-8-1886).

இவை உலகுக்கு உரியனவாக விளங்கும் கொள்கைகள். சமயத்தில் இருந்து சுதந்தரமானவையும் கூட. இவை உலகாயதம். ஆங்கிலேய நேர்க் காட்சி வாதம் மற்றும் பிரயோஜன வாதம் ஆகியனவற்றிற்கு எதிரானது. மேலும் இங்கிலாந்தினர் மற்றும் யுரேஷியரிடம் கற்றவையும் அல்ல. அங்கும், இங்கும் எந்த நாத்திகச் சபையிலும் இவை பிரசாரத்திற்காக ஒலிக்கப் பட்டவையும் அல்ல. இங்கேயே இவரிடமே பிறந்தவை. சார்லஸ் பிராட்லா மற்றும் அப்ஷன் துரை போன்ற பகுத்தறிவு நாத்திகருடன் அப்போது நட்போடு பழகினாலும் கருத்தியலில் மட்டும் முற்றிலும் வேறுபட்டு நின்றன. இதனாலேயே

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி முழுவதும் கருத்துலகில் கோலோச்சி எதிர்நிலையில் நின்றன. பிற்காலத்தில் இந்தச் சமூகச் சிந்தனைகளோடு மார்க்சியம் இணைந்தது என்பது வரலாறு. சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அந்த அருஞ்செயலைச் செய்தார். இந்தச் சமயத்தில்தான் வேதாந்தத் துறையில் இருந்தபடி சி. சுப்பிரமணிய பாரதியார் பொதுவுடைமையைத் தழுவினார்.

தத்துவ விசாரிணி மற்றும் தத்துவ விவேசினில் 1872 முதல் 1890 வரை எழுதியதன் மூலம் தமிழக உலகாயத நாத்திகத்தினை அப்போதைய அறிவியல் வழிப்பட்ட பொருள்முதல் வாதத்தினைக் கைப்பிடித்து நவீன நிலைக்கு உயர்த்திய முன்னோடிகளாக ‘இந்து சுயக்கியான சங்கம்’ மற்றும் ‘சென்னை லௌகிக சங்கம்’ ஆகியன திகழ்ந்தன. சோமையா மற்றும் பு. முனுசாமி நாயக்கர், அமரம்பேடு முத்துசாமி முதலியார், தெய்வசிகாமணி ஆகியோர் அதைச் செய்தனர். வள்ளலார் காலத்தில் இவர்கள் வாழ்ந்து பின்னும் இருந்தனர். 1878 முதல் 1892 முடிய தமது இதழ்களில் 128 குறுங்கட்டுரைகள், 14 சிறு நூல்களைப் பிரசுரித்தனர். இவை தமிழக நவீன காலத்தின் தொடக்க கால மெய்ஞ்ஞானக் கருவூலங்கள். இவற்றில் தமிழகத் தேகாத்ம வாதம், உலகாயதம், பொருள்முதல் வாதம் பேசினர், எழுதினர்.

தமிழக உலகாயத நாத்திகத்தினை அப்போதைய அறிவியல் வழிப்பட்ட பொருள்முதல் வாதத்தினைக் கைப்பிடித்து நவீன நிலைக்கு உயர்த்திய முன்னோடிகளாக ‘இந்து சுயக்கியான சங்கம்’ மற்றும் ‘சென்னை லௌகிக சங்கம்’ ஆகியன திகழ்ந்தன

## பின்சொல்

மயூரம் வேதநாயகம் பிள்ளை, ஹென்றி ஆல்பிரெட் கிருஷ்ணப் பிள்ளை, இராபர்ட் கால்டுவெல், ஜி.யு. போப், டபிள்யு. ஹண்டர், மோனியர் வில்லியம்ஸ், ஜான் மர்டக், எச். ஹார்வி, ஓயிட்ஹெட் (கிறித்தவம்; கடலூர் ஸ்ரீதரலு நாயுடு, சேலம் பகடால. நரசிம்மலு நாயுடு, காசி விஸ்வநாத முதலியார்(பிரம்ம சமாஜம்); அத்திப்பாக்கம் வெங்கடாசல நாயக்கர்(வணிகர்), சிதம்பரம் சீனிவாச சாஸ்திரி, பி. ஆர். இராஜம் ஐயர், கே. ஜி. சேஷய்யர், வித்வான் ஸீதாராமசாஸ்திரி, பேராசிரியர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி, கும்பகோணம் பேராசிரியர் சுந்தரராமன், அழகிய சிங்கப் பெருமாள், உ.வே. சாமிநாத ஐயர், வே. குப்புஸ்வாமி ராஜு (வேதாந்தம்); மாடபூசி இராமாநுஜாசாரி, ஸி. முத்துகிருஷ்ண நாயுடு, ஈச்சம்பாடி. தேசிகாசாரி, புதுப்பட்டு திருவேங்கடாசாரி, வை. மு. சடகோப ராமாநுஜர், உ. வே. நரசிம்மாசாரி, தி.சே. நரசிம்மன், வே. முத்து நாயுடு, வித்துவான் பாகவதர் மு. வேணுகோபால சாமி (வைணவம்); கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள், பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை, ஆறுமுக நாவலர், தாண்டவராய சுவாமிகள், தொழுவூர் வேலாயுத முதலியார், சூளை சோமசுந்தர நாயக்கர், யாழ்ப்பாணம் கோவைச் சபாபதி நாவலர், நாகை. நீலலோசினி, ஜி. சதாசிவம் பிள்ளை, பிறைசை அருணாசல சுவாமிகள், யாழ்ப்பாணம் செந்திநாதையர், ஜே.எம். நல்லசாமி பிள்ளை, பூவை கல்யாணசுந்தர முதலியார், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, நாவலர் ச. சோமசுந்தர பாரதி,

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், கோயம்புத்தூர் கந்தசாமி முதலியார் (சிவக்கவிமணியார் தந்தை) (சைவம்) ஆகிய தத்துவம் மற்றும் சமூகவியல் சிந்தனையாளர்கள், தத்துவநூல்களின் உரையாசிரியர் அனைய சான்றோர் வாழ்ந்து அறிவொளி வீசிய காலம் அது. இவர்களில் பெரும்பாலோர் இந்து சுயக்கியான சங்கம் மற்றும் சென்னை லௌகிக சங்கம் ஆகியவற்றின் காரியங்களை அறிவர். 'தத்துவவிசாரிணி' மற்றும் 'தத்துவ விவேசினி' இதழ்களையும் நன்கு அறிந்தவர் அதோடு சிலர் வாசித்தவர் என்பதும் உறுதி.

இந்தியா மற்றும் தமிழகச் சார்வாகம், உலகாயதம் மற்றும் பொருள்முதல் வாதமானது அதனை எதிர்க்கும் அறிஞர்களால் பழைய இலக்கியங்களில் பேசப்பட்ட சான்றுகளே இன்று நமக்குக் கிடைக்கின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இங்கு நிலவிய உலகாயத நாத்திகம் என்பதும், அந்தப் பொருள்முதல் வாதமும் அதனைக் கைக்கொண்டவர்களாலேயே அவை தமிழகத்தினில் எழுதப்பட்டன. 1879 முதல் 1890 முடியத் தமது சங்கங்கள் வழி எழுதினர், பேசினர். தமது பத்திரிகைகளில் வெளியிட்டனர். இதை எவராலும் தடுக்கவோ தவிர்க்கவோ இயலவில்லை. இவற்றில் 1883, 1884, 1886, 1887, 1888ஆம் ஆண்டுகளில் வெளிவந்த இதழ்கள் இன்றும் பாதுகாக்கப்பட்டு உள்ளன. இவற்றில் உள்ள கட்டுரைகளை வகைப்படுத்தித் தொகுதிகளாக வெளியிடுவது அவசியம். இவற்றிற்கு வாசகர்களும். ஆராய்ச்சியாளர்களும் பெருக வேண்டும். இந்த 21ஆம் நூற்றாண்டினில் இங்கு மார்க்சியம் கற்றுத் தேர்ந்தவர்கள் தொன்மையான தேகாத்ம வாதம், உலகாயத நாத்திகம், பொருள்முதல் வாதத்தினை அறிந்து இருப்பதோடு, ஆங்கிலேயர் மற்றும் காரல் மார்க்ஸ் காலத் தமிழகத்துப் பொருள்முதல் வாதத்தினையும் அறிந்து இருப்பது, இந்திய, தமிழக மக்களது கடந்த, நிகழ், எதிர் காலம் பற்றிய துல்லியத்தைக் காட்ட ஊன்றுகோலாகும் என்பது உறுதி.

தேகாத்ம வாதம், உலகாயத நாத்திகம், பொருள்முதல் வாதத்தினை அறிந்து இருப்பதோடு, ஆங்கிலேயர் மற்றும் காரல் மார்க்ஸ் காலத் தமிழகத்துப் பொருள்முதல் வாதத்தினையும் அறிந்து இருப்பது, இந்திய, தமிழக மக்களது கடந்த, நிகழ், எதிர் காலம் பற்றிய துல்லியத்தைக் காட்ட ஊன்றுகோலாகும்

## ஆதாரம் மற்றும் பார்வை நூல்கள்

1. ஆச்சாரிய இருதயம், ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ திருவரங்கம், 1998.

2. ஆரியமத ஸித்தாந்த ஸங்கிரகம். வில்வரம்பல் குப்புஸ்வாமி அய்யர், கோயம்புத்தூர், 1902.

3. ஆஸ்திக மத சித்தாந்தம், சேலம் பகடால. நரசிம்மலு நாயுடு, 1882.

4. ஈச்சுர நிச்சயம், யாழ்ப்பாணம் ச. சபாரத்தின முதலியார், சென்னை, 1896.

5. சத்திய வேத பரிட்சை, சனம் விராக்கினி மாதா கோவில், புதுச்சேரி, 1846.

6. சமய பரிட்சை, இராபர்ட் ப்ரேன், சன்மார்க்க சிறு புத்தகச் சங்கம், வேப்பேரி, 1858.

7. சரித்திர சாரசங்கிரகம், சேலம் பகடால. நரசிம்மலு நாயுடு, கோயம்புத்தூர், 1903.

8. சித்தாந்த ரத்நாகரம், சூளை. சோமசுந்தர நாயக்கர், 1880.

9. சென்னை லௌகிகச் சங்கம், வீ. அரசு, உலகத் தமிழ் செம்மொழி மாநாடு, கோயம்புத்தூர், 2010.

10. செந்தமிழ் மாத இதழ், மதுரைத் தமிழ்ச் சங்கம், மார்ச் 1908, டிசம்பர் 1910.

11. தத்துவவிவேசினி (1883-1996) இதழ்களின் தொகுதி, பொறிஞர் உலோ. செந்தமிழ்கோதை, சென்னை.

திரு சுந்தரராஜன். பேரா. க. அன்பழகன் ஆய்வு நூலகம். சென்னை.

12. திருவாய்மொழிப் பேருரை, ஆழ்வார்திருநகரி, அரையர் ஸ்வாமிகள், கா. ராமஸ்வாமி நாயுடு பரிசோதித்தது, சென்னை, 1878.

13. துவைத சைவ கண்டனம், பிரம்ம வித்யா தொகுப்பு, ஸ்ரீனிவாச சாஸ்திரி, சிதம்பரம், 1886 முதல் 1896 முடிய.

14. பிரபஞ்ச விசாரம். யாழ்ப்பாணம் சி. சபாரத்தின முதலியார், சென்னை, 1894.

15. பகுத்தறிவு நாத்திகம் பிறந்தது, கி. முப்பால்மணி, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோயம்புத்தூர், 2010.

16. வேத அகராதி, ஹென்றி பவர். எஸ்.பி.ஜி. மிஷின், வேப்பேரி, 1841.

17. வேதாந்த தீபிகை, மாத இதழ் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்த சபை, சென்னை, 1924.

18. ஸ்ரீவிசார சாகரம், ஸ்ரீசாது நிச்சல தாஸர், அ. சிவராவ் (மொழி பெயர்ப்பு), 1914.

19. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், அ.மா. சாமி, சென்னை, 1984.

**முனைவர் கி. முப்பால்மணி**

3/56 முதல்தெரு, குருந்தாசல நகர்,

வடமதுரை, கோயம்புத்தூர்–641017